இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 21.04.2026

# சதியை முறியடித்த முதலமைச்சர்!

**தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் அரசியல் உரிமையைப் பறிக்க நினைத்தது பா.ஜ.க. அத்தகைய சதியை முறியடித்து விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் குரல் வளையை நெரிக்கத் திட்டமிட்டது பா.ஜ.க. அத்தகைய கொடூரத்துக்கு முடிவு கட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை வழங்கப் போகிறோம் என்று சொல்லி விட்டு அதற்குள் தொகுதி மறுவரையறையையும், அதன் மூலமாக தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு மாபெரும் குழியையும் தோண்டி வைத்திருந்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதனை முன்கூட்டியே உணர்ந்து உரிமைக் குரலை உரக்கக் கொடுத்தார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இதனை ஓராண்டுக்கு முன்பே உணர்ந்து போராடினார் முதலமைச்சர் அவர்கள். தென் மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டினார்.

**“இந்தப் போராட்டம் எல்லை வரையறைக்கு எதிரானது அல்ல. இந்தப் போராட்டம் நியாயமான எல்லை வரையறையை வலியுறுத்துகிறது.**

**“This fight is not against delimitation.**

**This fight is for fair delimitation”** என்பதை அப்போதே சொன்னார் முதலமைச்சர் அவர்கள். “தமிழ்நாட்டுக்கான தொகுதிகள் குறையாது” என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா அப்போது சொன்னாரே தவிர, எந்த மாதிரி இதனைச் செய்யப் போகிறோம் என்று சொல்லவில்லை. திடீரென்று ஏப்ரல் 16 ஆம் தேதியை தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்தைக் கூட்டியது பா.ஜ.க. அரசு.

543 தொகுதிகள் இருக்கும் மக்களவையை 850 ஆக்கி, வட மாநிலங்களுக்கு மிக அதிகமாகக் கொடுக்கத் திட்டமிட்டது பா.ஜ.க. தென் மாநிலங்களுக்கும் கூடுவதைப் போலத் தெரியும். ஆனால் வட மாநிலங்களை விடக் குறைவாகவே கூடும். இந்த சதியை உடனடியாக வெளிப்படுத்தி அறிக்கை கொடுத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இந்த அறிக்கை வந்த பிறகுதான் அகில இந்தியக் கட்சிகளே உன்னிப்பாக கவனித்தது.

‘அனைத்து மாநிலங்களுக்கும் கூடுகிறது, அதில் தவறு இல்லையே’ என்று தான் முதலில் அனைவரும் நினைத்தார்கள். ‘இல்லை, இது பாரபட்சத்துடன் அதிகரிக்கப்பட்டுள்ளது’ என்பதை இந்தியா முழுமைக்கும் அறிவித்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

‘மசோதா தாக்கல் செய்யப்படும் நாளில் கருப்புக் கொடி ஏற்றுவோம்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பிறகுதான் இந்தியா முழுமைக்குமான கட்சிகள் எச்சரிக்கை உணர்வுடன் இந்த மசோதாவைப் பார்க்கத் தொடங்கியது. தேர்தல் பணியில் இருக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவசரக் கூட்டமாகக் கூட்டினார் முதலமைச்சர்அவர்கள். அனைவரையும்ஏப்ரல்16அன்றுநாடாளுமன்றம் செல்லச் சொன்னார். உடனடியாக தி.மு.க. மாவட்டச் செயலாளர் கூட்டம் கூட்டினார். ‘கருப்புக் கொடி போராட்டம் நடத்துங்கள்’ என்று சொன்னார் முதலமைச்சர்.

**நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் பரப்புரையில் இருந்த முதலமைச்சர் அவர்கள், கருப்புச் சட்டை அணிந்து, கருப்புக் கொடியை ஏற்றினார். அந்த மசோதாவின் நகலையும் எரித்தார். நகல் எரிப்பு போராட்டம் நடத்தியது இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்தது. ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் இதனைக் கையில் எடுத்தது. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கார்கே வீட்டில், ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் கூடியது. அதில் இந்த ஆபத்து முழுமையாக அனைவருக்கும் சொல்லப்பட்டது.**

இதனை பா.ஜ.க. எதிர்பார்க்கவில்லை. மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை முன்னே வைத்து, மற்றவைகளை பின்னால் வைத்து நிறைவேற்றிவிடலாம் என்று நினைத்தவர்கள் எண்ணத்தில் மண் விழுந்தது. தமிழ்நாட்டின் குரலை, அகில இந்தியாவின் குரலாக மாற்றியதில்தான் மாண்புமிகு முதலமைச்சரின் வேகமும், விவேகமும் அடங்கி இருக்கிறது.

தொகுதி மறுவரையறையில் அதிக பலன் அடையும் மாநிலம் உத்தரப்பிரதேசம்தான். அந்த மாநிலத்தைச் சேர்ந்த அகிலேஷ் யாதவ் அவர்கள், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் குரலை எதிரொலித்தார் என்றால் அதில்தான் முதலமைச்சரின் வேகமும், விவேகமும் அடங்கி இருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பற்ற வைத்த நெருப்பு இந்தியா முழுவதும் பரவியதால்தான் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்தன. ஒன்றிய பா.ஜ.க. அரசின் சதியை முறியடித்து, தொகுதி மறுவரையறை மசோதாவை நாடாளுமன்றத்தில் தோற்கடித்தன.

நாடாளுமன்றத்தில் பதிவான வாக்குகள் 528. இந்த மசோதா வெற்றி பெறுவதற்கு 352 வாக்குகள் தேவை. பா.ஜ.க.வுக்கு ஆதரவாக விழுந்தது 298 வாக்குகள்தான். எதிர்த்து பதிவான வாக்குகள் 230. மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் இல்லாததால் மசோதா தோற்றது.

தமிழ்நாட்டிலும், மேற்கு வங்கத்திலும் தேர்தல் நடப்பதால் அங்கிருந்து அனைத்து உறுப்பினர்களும் வரமாட்டார்கள் என்று பா.ஜ.க. அரசு நினைத்தது. ‘தேர்தலை விட அதுதான் முக்கியம்’ என்று அனைத்து உறுப்பினர்களையும் அனுப்பி வைத்தார் முதலமைச்சர் அவர்கள். இதனையும் பா.ஜ.க. எதிர்பார்க்கவில்லை. மேற்கு வங்கத்தில் இருந்தும் மம்தா பானர்ஜி, திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரையும் அனுப்பி வைத்து விட்டார். குறைவான எம்.பி.க்கள் வந்தால் குறைவான எண்ணிக்கை போதும் என்று நினைத்தது பா.ஜ.க. அந்த எண்ணத்திலும் மண் விழுந்தது.

**பா.ஜ.க.வின் சதி முறியடிக்கப்பட்டது. அதற்கான அரசியல் விழிப்புணர்வை விதைத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். டெல்லி அணியா, தமிழ்நாடு அணியா என்று அவர் கேட்ட கேள்விக்கான விடையில் டெல்லி அணியை தமிழ்நாடு அணி வீழ்த்தி விட்டது. பா.ஜ.க. அரசு முதன்முதலாக நாடாளுமன்றத்தில் தோற்கிறது. டெல்லியைத் தோற்கடித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

● ●

‘வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சீர்திருத்த மசோதாவுக்கு’ எதிர்ப்புத் தெரிவித்ததற்கு நன்றி!

# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு!

## முதல்வர் மு.க,ஸ்டாலினை – ரோமன் கத்தோலிக்க – இறைச்சபை – தென்னிந்தியத் திருச்சபை உள்ளிட்ட கிறிஸ்துவ அமைப்புகளின் நிர்வாகிகள் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, ஏப். 21 -

சிறுபான்மையினரான கிறிஸ்துவ மக்களின் பாதுகாவலர் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை ரோமன் கத்தோலிக்க - இறைச்சபை, தென்னிந்தியத் திருச்சபை (சிஎஸ்ஐ), இந்திய தேசிய தேவாலயங்கள் பேரவை, தமிழ்நாடு ஆயர் பேரவை (ரோமன் கத்தோலிக்கம்), ஆர்த்தடாக்ஸ் திருச்சபை, ஜீசஸ் கால்ஸ் அமைப்பு, ஏ.ஜி.திருச்சபை, இந்திய நற்செய்தி திருச்சபை, சிரியோ மலபார் கத்தோலிக்க திருசசபை, ஈயேசு மீட்கிறார் அமைப்பு, தமிழ் சுவிசேஷலூத்தரன் தேவாலயம், இரும்புலியூர் பெந்தேகோஸ்தே மிஷன் ஆகிய கிறிஸ்துவ அமைப்புகளின் பேராயர், முன்னாள் பேராயர் மற்றும் நிர்வாகிகள் என 40க்கும் மேற்பட்டோர் நேரில் சந்தித்து “வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சீர்திருத்த மசோதா 2026” விற்கு எதிர்ப்பு தெரிவித்ததற்கு நன்றி தெரிவித்தும் தமிழ்நாடு சட்டப் பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்தனர்.



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.4.2026) அவரது இல்லத்தில், ரோமன் கத்தோலிக்க இறைச்சபை ஆட்சிப் பயிற்சிப் பள்ளியின் சென்னை மயிலாப்பூர் மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர் ஏ.எம். சின்னப்பா, அருட்தந்தை ஆல்டோ, தென்னிந்தியத் திருச்சபையின் (CSI) ஆயர் அருட்தந்தை பவுல் பிரான்சிஸ் ரவிச்சந்திரன், பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சி. பெர்னந்தாஸ் ரத்தின ராஜா, செபாஸ்டியன், எபெனேசர், இந்திய தேசிய தேவாலயங்கள் பேரவை பொதுச் செயலாளர் (NCCI) அருட்தந்தை ஆசிர் எபெனேசர், தமிழ்நாடு ஆயர் பேரவையின் (ரோமன் கத்தோலிக்கம்) துணை பொதுச் செயலாளர் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப், அருட்தந்தை டாக்டர். வின்செண்ட் சின்னதுரை, ஜேக்கபைட் சிரியன் ஆர்த்தடாக்ஸ் திருச்சபையின் அருட்தந்தை பேசில், ஜீசஸ் கால்ஸ் அமைப்பின் திருமதி ஸ்டெல்லா ரோமோலா பால் தினகரன், டேனியல் டேவிட்சன், ஏ.ஜி. திருச்சபையின் போதகர் ஆலன், இந்திய நற்செய்தி திருச்சபையின் (Evangelical Church of India) துணைத் தலைவர் ஆயர் கதிரோலி மாணிக்கம், தமிழ்நாடு லத்தீன் ஆயர் மாநாட்டின் பிரதிநிதி அருட்தந்தை பிரான்சிஸ் ஸ்டீபன், சிரியோமலபார் கத்தோலிக்க திருச்சபையின் அருட்தந்தை ஷெபின், இயேசு மீட்கிறார் அமைப்பின் பிரதிநிதி சகோதரர் கே. பொன் பாண்டிஇன்பரசு, சகோதரர் ஜே. ரத்தன் ராஜ், மெதடிஸ்ட் சர்ச் ஆஃப் இந்தியா மெட்ராஸ் மண்டல மாநாட்டின் பிஷப் திரு. சி.ஜி. தயானந்த், அருட்தந்தை டாக்டர் எஸ்.சி. பால் ராஜ், செல்வின் ஜெபராஜ், டெர்ரி ராக்லேண்ட், தமிழ் சுவிசேஷ லூத்தரன் தேவாலயத்தின் அருட்தந்தை பாஸ்டர் சாம்சன், இரும்புலியூர் பெந்தேகோஸ்தே மிஷனின் சகோதரர் டேவிட் பிரவீன், இம்மானுவேல் டேவிட், ஆல்வின் பிரபு, செல்வம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்ட மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்ததற்கும், சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாவலராக விளங்குவதற்கும் நன்றி தெரிவித்தனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் பி. வில்சன், வழக்கறிஞர் ரிச்சர்ட் வில்சன் ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (19.04.2026) காலை, சித்தரஞ்சன் சாலையில் உள்ள அவரது இல்லத்தில், ரோமன் கத்தோலிக்க - இறைச்சபை, தென்னிந்தியத் திருச்சபை (சிஎஸ்ஐ), இந்திய தேசிய தேவாலயங்கள் பேரவை , தமிழ்நாடு ஆயர் பேரவை (ரோமன் கத்தோலிக்கம்), ஆர்த்தடாக்ஸ் திருச்சபை, ஜீசஸ் கால்ஸ் அமைப்பு, ஏ.ஜி.திருச்சபை, இந்திய நற்செய்தி திருச்சபை, சிரியோ மலபார் கத்தோலிக்க திருசசபை, ஈயேசு மீட்கிறார் அமைப்பு, தமிழ் சுவிசேஷலூத்தரன் தேவாலயம், இரும்புலியூர் பெந்தேகோஸ்தே மிஷன் ஆகிய கிறிஸ்துவ அமைப்பு களின் பேராயர், முன்னாள் பேராயர் மற்றும் நிர்வாகிகள் என 40க்கும் மேற்பட்டோர் நேரில் சந்தித்து கிறிஸ்துவ சொத்துகள் மற்றும் தேவாலாயங்களை அழிக்கக் கூடிய “வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்கு முறை சீர்திருத்த மசோதா2026” வை எதிர்த்து முதலாவது நபராக குரல் கொடுத்து, தொடர்ந்து அம்மசோதாவை திரும்ப வேண்டுமென்று வலியுறுத்தி வருவதற்காக நன்றி தெரிவித்தனர்.

அதுசமயம் சிறுபான்மையினர் நலனுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்திலிருந்தே பாடுபட்டு வரும் தி.மு.க.ழகத்தை தலைமையேற்று வழிநடத்தி வரும் திராவிட மாடல் ஆட்சி நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நன்றி கூறி பாராட்டினை தெரிவித்த தோடு, நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தோளோடு தோளாக, அத்துணை கிறிஸ்துவ அமைப்புகளும் - கிறிஸ்துவ மக்களும், கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு அளிப்பதோடு, அவர்கள் வெற்றிபெற உறுதுணையாக இருந்து செயலாற்றி, மதவாத கட்சியான பாஜக கூட்டணியை தோற்கடிப்போம் என்று உறுதி பூண்டனர்.

மேலும், இரண்டு நாட்களுக்கு முன்பு கருஞ்சட்டை அணிந்து, கருப்பு கொடியேற்றி, மறுசீரமைப்பு திருத்தச் சட்ட நகலை எரித்து, இந்தியாவையே தன் பக்கம் திரும்பி பார்க்க வைத்து, பாசிச பாஜக அரசு கொண்டு வந்த “தொகுதி மறுசீரமைப்பு திருத்தச் சட்டத்தை” பாராளுமன்றத்தில் தோற்கடித்தைப் போலவே, கிறிஸ்துவ மக்களுக்கு எதிராக ஒன்றிய பாஜக அரசு கொண்டு வரும் இந்த “வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சீர்திருத்த மசோதா 2026வினையும்பாராளுமன்றத்தில் தோற்கடித்திட வேண்டுமென கோரிக்கை வைத்தனர்.

இந்நிகழ்வில் கழக மாநிலங் களவை உறுப்பினரும் - மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் எம்.பி. உடனிருந்தார்.

வஞ்சகமான - தீய முயற்சியை எதிர்த்து வாக்களித்த

# எதிர்க்கட்சியினரை பெண்களுக்கு எதிரானவர்கள் எனச் சித்தரிக்க மோடி முயற்சி!

## மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா அறிக்கை!

**புதுடெல்லி, ஏப். 21 -**

**தங்கள் நோக்கங்கள் நிறைவேறு வதற்காக எத்தகைய குறுக்கு வழிகளையும் கையாளும் மோடி அரசின் வழக்கமான தந்திரங்கள் இம்முறை படுதோல்வியடைந்துள்ளதாக மாநிலங்களவை தி.மு.க. குழுத்தலைவர் திருச்சி சிவா தெரிவித்துள்ளார்.**



மாநிலங்களவை திமுக குழுத்தலைவர் திருச்சி சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் பிரதமரான மோடி, முன்எப்போதும் இல்லாத வகையில், எதிர்க்கட்சிகள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட தாக்குதலை தொடுக்கும் வகையில் ஒரு தேசிய உரையை தொலைக்காட்சியில் நிகழ்த்தியுள்ளதாக கூறியுள்ளார்.

ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஒரு பின்னடைவாக அமைந்த ஜனநாயக வாக்களிப்பு செயல்முறையை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, மக்களவை வாக்கெடுப்பில் ஏற்பட்ட தோல்வியின் மீதான தனது சகிப்புத்தன்மையின்மையையே பிரதமரின் உரை வெளிப்படுத்துவதாக திருச்சி சிவா விமர்சித்துள்ளார்.

தொகுதி மறுவரையறை மற்றும் பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு ஆகிய இரண்டு அரசியலமைப்பு திருத்தங்களையும் ஒன்றாக இணைக்கும் வஞ்சகமான மற்றும் தீய முயற்சியை எதிர்த்து வாக்களித்த அனைத்து எதிர்க்கட்சிகளையும், பெண்களுக்கு எதிரானவர்கள் என்று சித்தரிக்க பிரதமர் மோடி முயன்றுள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

மக்களவையில் ஆளும் கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாதததால், இந்த மசோதா வாக்கெடுப்பில் தோல்வியடையும் என்பதை நன்கு அறிந்திருந்தும், எதிர்த்து வாக்களிப்பவர்களைக் குறை கூறுவதற்காகவே மோடி அரசு இவ்வாறு செய்துள்ளதாக திருச்சி சிவா விமர்சித்துள்ளார். தங்கள் நோக்கங்கள் நிறைவேறுவதற்காக எத்தகைய குறுக்கு வழிகளையும் கையாளும் மோடி அரசின் வழக்கமான தந்திரங்கள் இம்முறை படுதோல்வியடைந்துள்ளதாக திருச்சி சிவா தெரிவித்துள்ளார். இது பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் ஒரு புதிய அனுபவமாக அமைந்துள்ளதாகவும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு மசோதா எதிர்கட்சிகளின் ஒத்துழைப்புடன் மட்டுமே கடந்த 2023 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது என்பதை மோடியால் புறந்தள்ளிவிட முடியாது என்றும் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான் சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பதை பிரதமர் மோடிக்கு நினைவூட்டுவதாகவும் திருச்சி சிவா குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தற்போதைய ஆட்சியில்தான், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு, வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 40 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதும் பிரதமருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும் திருச்சி சிவா கூறியுள்ளார்.

மேலும், காவல்துறையில் பெண்களை பணியில் அமர்த்தியதும் தி.மு.க. ஆட்சியில்தான் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேநேரம், இந்தியாவில் 20 மாநிலங்களில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க.வில், டெல்லியில் மட்டும்தான், ஒரேயொரு பெண் முதலமைச்சர் உள்ளதாகவும், அதுவும் டெல்லியில் பெண் அமைச்சர்கள் யாரும் இல்லை என்பதை பிரதமர் மோடி வசதியாக மறந்துவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார். இதன் மூலம் எதிர்க்கட்சிகள் பெண்களின் நலனுக்கு ஆதரவாக செயல்படுவதில்லை என்று குற்றம்சாட்டுவதற்கான நம்பகத்தன்மை மோடியிடம் துளிக்கூட இல்லை என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியினரை நோக்கி ஒரு விரலை நீட்டும்போது, மற்ற மூன்று விரல்கள் தங்களை நோக்கி காட்டுகின்றன என்பதை பிரதமர் மோடி மறந்துவிடக்கூடாது என, மாநிலங்களவை தி.மு.க. குழுத்தலைவர் திருச்சி சிவா வெளியிட்டுள்ள அறிக்கையில் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.



மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர், மாநிலங்களவை உறுப்பினர் கமல்ஹாசன் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜிக்கு ஆதரவாக கோவை ராஜவீதி, தேர் நிலைத்திடலில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். இதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.